# நீக்குப்போக்கான வேலைமுறையை விரும்பும் பெரும்பாலான ஊழியர்கள்: IPS ஆய்வு

**வீட்டிலிருந்து வேலை செய்வதை விரும்புவோரில் 42 விழுக்காட்டினர், பெரும்பாலான நாள்கள் அலுவலகத்துக்கு வருமாறு முதலாளிகள் சொன்னால் புதிய வேலை தேடப்போவதாகக் கூறினர்.**

***Seithi Mediacorp,*** 25 April 2022

வீட்டிலிருந்து வேலை செய்யும் சிங்கப்பூரர்களில் பத்தில் ஒன்பது பேர், வேலை இடத்தின் புதிய இயல்பாகத் தொலைவிலிருந்து பணியாற்றுவதும் நீக்குப் போக்கான வேலை ஏற்பாடுகளும் இருக்கவேண்டுமெனக் கூறியுள்ளனர்.

கொள்கை ஆய்வுக் கழகம் 2,000 பேரிடம் நடத்திவரும் கருத்துக் கணிப்பில் அவர்கள் அதனைத் தெரிவித்தனர்.

வேலை செய்வோரில் ஆண்களைக் காட்டிலும் அதிகமான பெண்களே நீக்குப்போக்கான வேலைமுறைக்கு விருப்பம் தெரிவித்தனர்.

குறிப்பாக, இளம் பிள்ளைகளையும் முதியோரையும் பராமரித்தவாறு வீட்டிலிருந்து வேலை செய்யும் பெண்கள் அதற்கு அதிக ஆதரவு தெரிவித்தனர்.

பிள்ளைகளைக் கொண்ட பெண் ஊழியர்கள் பெரும்பாலான நாள்கள் வீட்டிலிருந்து பணிபுரிவதை விரும்புவதாகக் கழகத்தின் அறிக்கை குறிப்பிட்டது.

வீட்டிலிருந்து அதிகநாள் வேலை செய்வோரில் கிட்டத்தட்ட பாதிப்பேர், வேலை நேரம் முடிந்தபின்னரும் அதிலிருந்து விடுபட முடியாதது ஆகப்பெரிய சவால் என்று கூறினர்.

மற்றவர்களைப் பொறுத்தவரை, சக ஊழியர்களோடு கலந்து பழகும் வாய்ப்புக் குறைவது அல்லது முதலாளிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான நம்பிக்கையை உருவாக்குவதில் சிரமத்தைச் சந்திப்பது முதலிய பிரச்சினைகளைச் சுட்டினர்.

இருப்பினும், நீக்குப்போக்கான வேலை ஏற்பாடுகளை ஊழியர்கள் விரும்பும்நிலையில் செய்துதர இயலாத நிறுவனங்களால் ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வது சிரமம் என்பதும் ஆய்வில் தெரியவந்தது.

வீட்டிலிருந்து வேலை செய்வதை விரும்புவோரில் 42 விழுக்காட்டினர், பெரும்பாலான நாள்கள் அலுவலகத்துக்கு வருமாறு முதலாளிகள் சொன்னால் புதிய வேலை தேடப்போவதாகக் கூறினர்.

*ஆதாரம் : CNA*